ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வர வர முநயே நம:
ஸ்ரீவாதி பீகர மஹாகுரவே நம:

# ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயில், திருமணிக்கூடம்

ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேசம் - திருநாங்கூர்
சீர்காழி வட்டம் - மயிலாடுதுறை மாவட்டம்

## ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷணப் பத்திரிகை

**நாள்: 25 - 10 - 2026, ஞாயிற்றுக்கிழமை | நேரம்: 8.00 - 9.00am**



ஸ்ரீதேவி, பூதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள்
திருமணிக்கூடம், திருநாங்கூர்

தூம்புடைப் பனைக் கை வேழம்
துயர் கெடுத்தருளி
மன்னு காம்புடைக் குன்றம் ஏந்திக்
கடு மழை காத்த எந்தை
பூம் புனற் பொன்னி முற்றும் புகுந்து
பொன் வரண்ட
எங்கும் தேம் பொழில் கமழும் நாங்கூர்த்
திருமணிக்கூடத்தானே
திருமங்கையாழ்வார் - பெரிய திருமொழி || *4.5.1* ||

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வர வர முநயே நம:
ஸ்ரீவாதி பீகர மஹாகுரவே நம:

*கருமகள் இலங்கை யாட்டி பிலங்கொள்வாய் திறந்து * தன்மேல்*
*வருமவள் செவியும் மூக்கும் வாளினால் தடிந்த எந்தை **
*பெருமகள் பேதை மங்கை தன்னொடும் பிரிவிலாத **
*திருமகள் மருவும் நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே.*

*- திருமங்கையாழ்வார் - பெரியதிருமொழி 4.5.5*

ஸ்ரீய: பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஸ்ரீ வைகுண்டநிகேதனாய், ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாயிருக்கிற ஸர்வேஸ்வரன், ஸம்ஸாரி சேதனோஜ் ஜீவனார்த்தமாக பின்னானார் வணங்கும் ஜோதியாய். எய்துமவர்க்கு இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிது என்றபடி, எக்காலத்திலும், எத்தேசங்களிலும், எல்லார்க்கும், ஆச்ரயண சுலபமாம்படியான அர்ச்சாவதாரமாகி பலபதிகளில் எழுந்தருளி நித்யவாஸம் செய்து அனைவரையும் வாழ்வித்தருளுகிறான்.

அவ்வப்பதிகளுள், யாவரும் வந்து அடிவணங்கும்படி கோயில், திருமலை, பெருமாள்கோயில் முதலான 108 திவ்யதேசங்களில் கோயில்கொண்டு ஸர்வ சுலபனாக எழுந்தருளியிருக்கிறான். அப்பதிகளுள், ஸ்ரீ திருமங்கை ஆழ்வாரால் விபவத்தைபோலே அர்ச்சையிலும் மங்களாசாசனம் செய்யும் ஏற்றம் பெற்ற திருநாங்கூர் பதினோரு திவ்யதேசங்களில் இந்த திவ்யதேசம்

“தூம்புடைப் பனைக்கைவேழம் துயர்கெடுத்தருளி மன்னு
காப்புடைக் குன்றமேந்திக் கடுமழைகாத்த எந்தை”

என்ற இந்த திவ்யதேச மங்களாசாசன பாசுரப்படி எம்பெருமான் ஆனையின் அருந்துயர் தீர்த்தும், குன்றமேந்தி குளிர்மழை காத்தும், பரமக்ருபாளுவாய், அர்ச்சையிலே நம் அனைவருக்கும் ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கும் சிறப்புடையது. இப்பெருமான் தன் பக்தர்களுக்கு வரம் தரும் ஸமர்த்தனாகையால்,

“மூவரில் எங்கள் மூர்த்தி இவனென முனிவரோடு
தேவர் வந்திறைஞ்சும் நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே”

என்று திருமங்கை ஆழ்வார் மங்களாசாசன சிறப்பு பெற்றது.

இவ்வாறு பெருமை வாய்ந்த இந்த திவ்யதேசம், மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் பரிபூரண அருளாசிகள் மற்றும் வழிகாட்டுதல் படி தெய்வத்திரு அனுகுல வெங்கடப்பா பக்தவச்சலம் அவர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தினரான திருமதி ரமண பக்தவச்சலம் மற்றும் திரு.சஞ்சய் அனுகுல அவர்களின் பொருளுதவியுடனும் மேலும் திருக்கோயில் வளாகத்தின் இரண்டாம் ப்ராகாரத்தின் நூதன திருமதில் சுவரை *(Compoundwall)* தி சென்னை சில்க்ஸ் குழுமத்தின் *(The Chennai Silks Group)* நிறுவனர் தெய்வத்திரு அ. குழந்தைவேல் முதலியார் அவர்களின் நினைவாக தி சென்னை சில்க்ஸ் *(The Chennai Silks)* நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு *N.K.* நந்தகோபால் அவர்களால் நிர்மாணம் செய்யப்பட்டு ஜெய ஹனுமான் சேவா டிரஸ்ட் சென்னை, மூலம் ஏகதேச திருப்பணி கைங்கர்யம் சிறப்பாக செய்யப்பட்டு, நாளது பராபவ வருஷம், ஐப்பசி மாதம் *8*ம் தேதி *(25 - 10 - 2026)* ஞாயிற்றுக்கிழமை, ரேவதி நக்ஷத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில், காலை *8.00* மணிக்கு மேல் *9.00* மணிக்குள் விருட்சிக லக்னத்தில் மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற இருப்பதால், ஆஸ்திக மஹாஜனங்கள் அனைவரும் அன்வயித்து மஹாஸம்ப்ரோக்ஷணத்தை பூர்த்தி செய்து திருமணிக்கூடம் ஸ்ரீ வரதராஜப்பெருமானின் க்ருபா கடாக்ஷத்திற்கு பாத்திரமாகும்படி ப்ரார்த்திக்கிறோம் / கேட்டுக்கொள்கிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

| நாள் | கிழமை | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|
| 21-10-2026<br>ஐப்பசி - 4 | புதன் | மாலை | நித்ய ஆராதனம், திருநாங்கூர் ஸ்ரீ வண் புருஷோத்தமன் பெருமாள் திருக்கோயிலில் இருந்து ஸ்ரீ மணவாள மாமுனிகள் எழுந்தருளி - பகவத் அனுக்ஞை, பாகவத அனுக்ஞை, விஸ்வக்சேன ஆராதனம், புண்யாவாசனம், மருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப்பணம், சதுர்வேத, இதிஹாச, புராண, திராவிட வேத பாராயணங்கள் தொடக்கம், சோமயாகம், வாஸ்து ஆவாஹனம், வாஸ்து சாந்தி ஹோமம், அஷ்டதிக் பந்தனம், சாற்றுமறை, தீர்த்த பிரசாத விநியோகங்கள். |
| 22-10-2026<br>ஐப்பசி - 5 | வியாழன் | காலை | நித்ய ஆராதனம், பூதசுத்தி, புண்யாவாசனம், ரக்ஷாபந்தனம், தீர்த்த ஸங்க்ரஹணம், சக்த்யாகர்ஷணம், யாசாலை பிரவேசம், துவார, தோரண, த்வஜ, கும்ப பூஜைகள், மண்டல, கும்ப, பிம்ப, அக்னி சதுஸ்தான பூஜைகள் மந்திரபுஷ்பம், தளிகை அமுது செய்வித்தல் ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத, இதிஹாச புராண, திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 1-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் |

| | | | |
|---|---|---|---|
| 22-10-2026<br>ஐப்பசி - 5 | வியாழன் | மாலை | 4.00 மணியளவில் உற்சவமூர்த்திகள் சதகலச திருமஞ்சனம் கண்டருளல், பிறகு 2-ஆம் கால துவார, தோரண, த்வஜ, கும்ப பூஜைகள், மண்டல-கும்ப-பிம்ப-அக்னி-சதுஸ்தான பூஜைகள், உபசாராதிகள், மந்திரபுஷ்பம், தளிகை, அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள், சதுர்வேத, இதிஹாச புராண, திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 2-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் |
| 23-10-2026<br>ஐப்பசி - 6 | வெள்ளி | காலை | நித்ய ஆராதனம், பூதசுத்தி, துவார - தோரண த்வஜ - கும்ப - பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப - அக்னி சதுஸ்தான பூஜைகள் உபசாராதிகள், மந்திரபுஷ்பம் தளிகை அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத – இதிஹாச - புராண, திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 3-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் |
| 23-10-2026<br>ஐப்பசி - 6 | வெள்ளி | மாலை | 4 – மணிக்கு மூலவர் திருமஞ்சனம்<br>6 – மணியளவில் துவார – தோரண – த்வஜ – கும்ப பூஜைகள், மண்டல கும்ப – பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள் உபசாரங்கள், மந்திரபுஷ்பம், தளிகை அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத – இதிஹாச புராண – திராவிட வேத பாராயணங்கள், ஹோமங்கள் முடிந்து 4-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம் |
| 24-10-2026<br>ஐப்பசி - 7<br><br>24-10-2026<br>ஐப்பசி - 7 | சனி<br><br>சனி | காலை<br><br>மாலை | நித்ய ஆராதனம், பூதசுத்தி, துவார – தோரண – த்வஜ – கும்ப – பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள், உபசாரங்கள் மந்திர புஷ்பம், தளிகை அமுது செய்வித்தல் ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத இதிஹாச – புராண – திராவிடவேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 5- ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம்<br><br>4 – மணிக்கு விமான கலசங்கள் திருமஞ்சனம்<br>நித்ய ஆராதனம், பூதசுத்தி, துவார – தோரண – த்வஜ – கும்ப – பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள், பிம்ப – அக்னி சதுஸ்தான பூஜைகள், உபசாராதிகள், மந்திரபுஷ்பம், தளிகை அமுது செய்வித்தல், ஹோமக்கிரியைகள் மற்றும் சதுர்வேத – இதிஹாச – புராண – திராவிட வேத பாராயணங்கள், ஹோமாதிகள் முடிந்து 6-ஆம் கால பூர்ணாஹுதி, தளிகை அமுது செய்வித்தல், அபராதக்ஷமாபணம், சாற்றுமுறை, தீர்த்த பிரசாத விநியோகம், தத்வன்யாச ஹோமங்கள் சயனாதிவாசம். |

| | | | |
|---|---|---|---|
| 25-10-2026<br>ஐப்பசி - 8 | ஞாயிறு | காலை | விஸ்வருபம் நித்ய ஆராதனம், பூதசுத்தி, த்வார - தோரண – த்வஜ – கும்ப – பூஜைகள், மண்டல – கும்ப – பிம்ப – அக்னி – சதுஸ்தான பூஜைகள், உபசாரங்கள் மந்திர புஷ்பம், தளிகை அமுது செய்வித்தல் ஹோமக்கிரியைகள் மற்றும் சதுவேத இதிஹாச - புராண - திராவிட வேத பாராயணங்கள், ஹோமங்கள் முடிந்து 7 – ஆம் கால மஹா பூர்ணாஹீதி தளிகை அமுது செய்வித்தல், யாத்திராதானம், கிரஹபிரீதி, துவாராதி, கும்ப பர்யந்தம் உத்வாசனம் காலை 8.00 மணிக்கு கும்ப கலசங்கள் பெருமாளுடன் புறப்பாடு, 8.30 மணிக்கு, ஸ்ரீபெருமாள், கருடன் விமானங்களுக்கு மஹாஸம்ப்ரோக்ஷணம் முடிந்து 8.35 மணிக்கு மேல் 9.00 மணிக்குள் மூலவர் மூர்த்திகள் அனைவருக்கும் மஹாஸம்ப்ரோக்ஷணம் தளிகை அமுது, அபராதக்ஷமம், ஸ்வஸ்தி வாசனம், சதுர்வேத – இதிஹாச புராண, திராவிட வேத (நாலாயிர திவ்ய பிரபந்தம்) சாற்றுமுறை தீர்த்த கோஷ்டி, பிரசாத விநியோகம் தீர்த்தாசார்யர் மரியாதை, பொது ஜனசேவை. |
| 25-10-2026<br>ஐப்பசி - 8 | ஞாயிறு | மாலை | 6 மணியளவில் நித்ய ஆராதனம், தொடர்ந்து ஸ்ரீ பெரியதிருவடி (கருட) வாகனத்திலும், ஸ்ரீ மணவாள மாமுனிகள் சேஷபிடத்திலும், வெளிப்பிரகாரத்தில் திருவீதி புறப்பாடு. கைத்தல சேவை. |

## ஸ்ரீமந்நாக புரீஸாய ரத்நகூடநிவாஸிநே
## ஸ்ரீபூமிப் யாம் ஸமேதாய வரதாயாஸ்து மங்களம்



திருமங்கையாழ்வார்



ஸ்ரீ மணவாள மாமுனிகள்



பிரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ அண்ணா ஸ்வாமிகள்

## பகவத் கைங்கர்யத்தில்

பரம்பரை தர்மகர்த்தாக்கள்

ப்ரதிவாதி பயங்கரம் P. B. R. ரங்கநாதன்

ப்ரதிவாதி பயங்கரம் P. B. R. கண்ணன்

ப்ரதிவாதி பயங்கரம் P. T. S. புருஷோத்தமன்

ப்ரதிவாதி பயங்கரம் P. B. R. சீனிவாசன்

ப்ரதிவாதி பயங்கரம் P. T. R. சீனிவாசன்

ப்ரதிவாதி பயங்கரம் P. B. A. கிருஷ்ணமாச்சாரி

மற்றும் கிராமவாசிகள்

குறிப்பு : இத்திவ்யதேசம் சீர்காழி to கீழமூவர்கரை - 4 C நம்பர் ( டவுன் பஸ் ) மயிலாடுதுறை TO நாங்கூர் 28-ம் நம்பர் பஸ் மார்க்கத்தில் உள்ளது.
இந்த திவ்ய தேசம் திருநாங்கூரிலிருந்து கிழக்கே அரை மைலில் இவ்வூருள்ளது.

# திருமணிக்கூடம் ஸ்தல புராண வைபவம்

ஸ்ரீ பாத்ம புராணத்தில் ஸ்ரீ அகஸ்த்ய மஹரிஷி ஸ்ரீ வஸு மஹாராஜனுக்கு பலாஶவந மாஹாத்ம்தயத்தைக் கூறுகிறார். பலாவஶநத்தில் ஸ்ரீ ரத்நகூடம் (திருமணிக்கூடம்) என்னும் திவ்யஸ்தலம் உள்ளது. ஸ்ரீ ஸம்வர்த்தர் என்ற ரிஷி அங்கே எம்பெருமானை ஸேவித்துக் கொண்டிருந்தார். அவருடன் பவன் என்ற பரமசிவனும் அங்கே வரதனை ஸேவித்திருந்தார். தக்ஷனின் அஸ்வினி முதலான 27 பெண்களை சந்த்ரன் விவாஹம் செய்துகொண்டான். அவர்களில் ரோஹிணி என்பவளிடத்தில் மட்டும் மிகவும் பிரியமுடனும் மற்றவர்களிடம் பாராமுகமாக இருந்தான். தக்ஷன் இதையறிந்து சந்த்ரனை "நீ ராஜயக்ஷ்மா என்னும் நோயால் பீடிக்கப்படுவாய்" எனச்சபித்தார். அதனால் சந்த்ரன் ஒளியிழந்தவனாய், உடல் குறையப்பெற்றவனாய், நோய் தீர தீர்த்தயாத்ரையாய் வரும்போது பலாஶவநத்தில் ரத்நகூடஸ்தலத்தில் ஸ்ரீ ஸம்வர்த்தமுனிவரால் அநுக்ரஹிக்கப்பட்டவனாய், எம்பெருமானை நோக்கிக்கடும் தவம் புரிந்து, பக்தர்களின் ஆர்த்தியைப்போக்கும் வரதராஜனின் அருளால் நோய் நீங்கப்பெற்றான்.

### ப்ரஹ்ம நாரதீய புராண ஸ்லோகம்

தேவ: ஸ்ரீமணிகூடநாயகஹரிஸ்தத்ப்ரேயஸீ சேந்திரா
புண்யம் சந்த்ரஸரோ விமாநமபி தத்ர ப்ரஸந்நாஹ்வயம் |
பக்ஷீஶோந புரா ஸமஸ்தஜக தாம் க்ஷேமாய ஸாக்ஷாத்க்ருத:
பூர்வாம்போதி முகோ விராஜதி ரமாநீளாத ராஸங்கத: ||

பெருமாள் - திருமணிக்கூடநாயகன், வரதராஜன
தாயார் - இந்திராதேவி (திருமாமகள் நாச்சியார்)
விமானம் - ப்ரஸந்நவிமாநம்
புஷ்கரிணி - சந்த்ரபுஷ்கரிணி
திருக்கோலம் - நின்றதிருக்கோலம்
திருமுகமண்டலம் - கிழக்கே திருமுகமண்டலம்
ப்ரத்யக்ஷம் - (கருடனுக்கும்) ஸோமனுக்கும்
மங்களாசாஸநம் - திருமங்கையாழ்வார் (பெரியதிருமொழி (4 -5)

---

திருநாங்கூர் திவ்ய தேச
அனைத்து கைங்கர்யத்திலும்
என்றென்றும் உறுதுணையாக.

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்
ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு த்ராவிட
வேத ஆகம பாடசாலை, திருநாங்கூர்.

---

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே |
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே !!

---

சுபம்